ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1795/30 - 2013 ජනවාරි 30 වැනි බදාදා - 2013.01.30
*1795/30 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டத்தில் 2 ஆவது பிரிவின் கீழ் நடைபெறுகின்ற விசாரணை.*

மேல் மாகாணத்தின் முதலமைச்சர் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டத்தில் 2 (2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள்/குற்றச்சாட்டை காரணமாகக் கொண்டு களனி பிரதேச சபை நடவடிக்கை எடுக்கும்போது மேலே சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக தனி நபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி டட்லி கருணாரட்ன அவர்களை நியமிக்கின்றேன்.

**விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள்** :

(அ) களனி பிரதேச சபை மூலம் நடவடிக்கை எடுக்கும்போது களனி பிரதேச சபைக்குரிய கிரிபத்கொட வாராந்த சந்தை 2011, ஓகத்து மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2011, நவெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்கு இியையாக கடவத்தை தளுப்பிட்டிய இலக்கம் 162/2 முகவரியில் கே. ஜீ. டீ. திலக்கசிறி என்ற நபருக்கு ஒப்பந்தமின்றி நடாத்திச் செல்வதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 173 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) ஈ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(ஆ) களனி பிரதேச சபை மூலம் நடவடிக்கை எடுக்கும்போது களனி பிரதேச சபைக்குரிய ஹுணுப்பிட்டிய வியாபாரக் கட்டடத் தொகுதியில் ஒரு கடை அறை தொடர்பாக குறைந்த கூறல் பன்னிரண்டு இலட்சம் ஆக வேண்டும் என்று 2010, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி ஆகிய தினத்தில் களனிப் பிரதேச சபை, சபை அனுமதி அளிக்கப்பட்டிருக்கையில் அந்தப் பெறுமதிக்கு டெண்டர் அழைப்பின்றி ஒரு கடை அறை தொடர்பாக குறைந்த கோரல் ரூபா நான்கு இலட்சம் ஆக வேண்டும் என்று 2011, யூலை மாதம் 29 ஆந் திகதி சபை அனுமதித்ததன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) ஈ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(இ) களனி பிரதேச சபை மூலம் நடவடிக்கை எடுக்கும்போது களனி பிரதேச சபைக்குரிய ஹுணுப்பிட்டிய வியாபாரக் கட்டடத் தொகுதியில் ஒரு கடை அறை ஆயிரம் தொடர்பாக ஒரு கடை அறைக்கு குறைந்த கூறல் ரூபா நான்கு இலட்சம் ஆக வேண்டும் என்று முறையான மதிப்பீடு இன்றி சபை அனுமதியளித்து டெண்டர் அழைப்பிற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) ஈ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(ஈ) களனி பிரதேச சபை மூலம் நடவடிக்கை எடுக்கும் போது களனி பிரதேச சபைக்குரிய ஹுணுப்பிட்டிய வியாபாரக் கட்டடத் தொகுதியில் கடை ஆயிரத்தில் ஒரு கடை அறை தொடர்பாக குறைந்த கூறல் ரூபா பன்னிரண்டு இலட்சமாக இருக்க வேண்டுமென்று களனி பிரதேச சபை அங்கீகாரம் செய்திருந்த நிலையில் அதன் குறைந்த கூறல் நிதி ரூபா நான்கு இலட்சமாக இருக்க வேண்டுமென்று 2011, யூலை 27 ஆந் திகதி களனி பிரதேச சபை அங்கீகரித்து அதன்படி நடவடிக்கை எடுத்ததன் மூலம் களனிப் பிரதேச சபைக்கு ரூபா நூற்றி இருபத்தியெட்டு இலட்சம் அல்லது அதற்கு அண்மித்த நிதி நட்டம் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுத்ததன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ பிரிவில் வாய்மூல சாட்சி.

மேலும் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாகம் மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (2) அ பிரிவில் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப விசாரணை ஆணைக்குழு சபைக்கு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்குரிய அதிகாரம் இந்த தனி நபருக்குரிய அதிகாரம் இந்த தனிநபர் விசாரணை சபைக்கு உரித்தாவதோடு மேலே கூறப்பட்டுள்ள விடயங்களை விசாரணை செய்யும் போது ஏற்புடையதாக்கிக்கொள்ள வேண்டிய எழுத்துமூலம் மற்றும் வாய்மூலமான சாட்சியங்கள் கீழ் உள்ள அட்டவணையுடன் உள்ளடக்கப்பட்டுள்ளதென்று மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல்,
சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு
மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சு,
சிராவஸ்தி மந்திர,
கொழும்பு 7.
2013, சனவரி 17.

**அட்டவணை**

***வாய்மூல சாட்சி :***

1. களனி பிரதேச சபையின் முள்ளாள் செயலாளர் எச். ஏ. ஹேமபால அவர்கள்.
2. களனி பிரதேச சபை, சபை நடவடிக்கைக்குப் பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர்.
3. கம்பஹா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நுண்ணாய்வு அதிகாரி கே. காமினி சோமரட்ன அவர்கள்.
4. களனி பிரதேச சபையின் கடை அறை குத்தகைக்கு கொடுப்பதற்கு தொடர்பான முகாமைத்துவ உதவியாளர்.
5. திருமதி டீ. எம். சுவர்ணா பீரிஸ் - செயலாளர், களனி பிரதேச சபை.

***எழுத்துமூல சாட்சி :***

1. களனி பிரதேச சபை, கிரிபத்கொட வாராந்த சந்தை தொடர்பாக 2010, சனவரி 31 ஆந் திகதியில் கையொப்பமிட்ட ஒப்பந்தம்.
2. களனிப் பிரதேச சபையின் 2011.06.30 ஆந் திகதி சபைக் கூட்ட அறிக்கை.
3. களனி பிரதேச கிரிபத்கொட வாராந்த சந்தை மனுக்கோரல் செய்வதற்கு தொடர்பான 2011.07.08 ஆந் திகதிய தினமின பத்திரிகை பிரசுரித்த அறிவித்தல்.
4. களனி பிரதேச சபை இலக்க க. பி. ச. /பி. அ. /கோ./வா. ச. /கு. வ. மற்றும் 2011..08.01 ஆந் திகதி கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
5. களனி பிரதேச சபை 2010.11.30 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்ட அறிக்கை.
6. களனி பிரதேச சபையின் 2011.07.29 ஆந் திகதி பொதுக்கூட்ட அறிக்கை.
7. களனி பிரதேச சபையின் 2011.07.29 ஆந் திகதி பொதுக்கூட்டம் தொடர்பான நிகழ்ச்சி நிரல்.
8. களனி பிரதேச சபையின் ஹுணுப்பிட்டிய வர்த்தக கட்டடத் தொகுதியில் கடை அறை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான கடிதக் கோவை.

2- 457

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.